## மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| M.C.O.P. No. 2/2022 | Date : 14.07.2023 | PW1 |
|---|---|---|
| Name: ராஜ்குமார் | S/o. **மாதப்பன்** | |
| Evidence Recorded Time: 12.11 P.M. to 12.20 P.M. | | |

**3-ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :-**

எனக்கு என்ன தொழில் என்றால் விவசாயம். சொந்தமாக விவசாயம் செய்து வருகிறேன். என்ன கிராமத்தில் எனக்கு சொந்தமாக நிலம் உள்ளது என்றால் தின்னப்பட்டி கிராமத்தில் உள்ளது. தின்னப்பட்டி கிராமத்தில் நிலம் உள்ளது என்பதை காட்டுவதற்கு எந்தவிதமான ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். டிராக்டர் வைத்திருப்பதற்கான ஆணவங்களையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பால் வியாபாரம் செய்து வருகிறேன் என்று கூறியுள்ளேன், பால் கூட்டுறவு சங்கதில் உறுப்பினராக உள்ளேனா என்றால் இருக்கிறேன். பால் வியாபாரம் செய்வதற்கு எந்தவிதமான ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கிற்காக நான் ஒரு லட்சம் சம்பாதிப்பதாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. விபத்தின் போது நான் எனது வண்டியில் தின்னப்பட்டியில் இருந்து கொள்ளத்துார் சென்று திரும்பி வந்து கொண்டிருந்தேன், அப்போதுதான் விபத்து நடைபெற்றது. உக்கம்பருத்திக்காடு பெரிய கொட்டாய் பகுதி வளைவான பகுதி என்றால் சரிதான். அந்த வளைவு பகுதியில் வண்டி வருவது தெரியாமல் நான் வலது பக்கமாக வாகனத்தை திருப்பிவிட்டேன் என்றால் சரியல்ல, நான் அந்த இடத்தில் நின்று கொண்டிருந்தேன். நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் நான் தான் ஆட்டோ வருவது தெரியாமல் வாகனத்தை திருப்பிவிட்டேன் என்றாலும் சரியல்ல. வாகனத்தை ஓட்டிச் செல்லும் போது தலைக்கவசம் அணியவில்லை என்றால் சரிதான். மருத்துவமனையில் எனக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு குணமடைந்துவிட்டேன் என்றால் சரியல்ல. மருத்துவசிகிச்சையில் நான் குணமடைந்துவிட்டேன் என்றாலும் நிரந்தர ஊனம் எதுவும் ஏற்படவில்லை என்றாலும் சரியல்ல. வாகனத்தை ஓட்டிச் வந்த ஆட்டோ ஓட்டுநருக்கு முறையான ஓட்டுநர் உரிமம் இல்லை என்பதால் காப்பீட்டு நிறுவனம் இழப்பீடு வழங்க கடமைப்பட்டது அல்ல

என்றாலும் சரியல்ல. விபத்திற்கு நானும் காரணம் என்பதாலும், ஆட்டோ ஓட்டுநர் காப்பீட்டு விதிமுறைகளை மீறி வாகனத்தை இயக்கியுள்ளதாலும் காப்பீட்டு நிறுவனம் இழப்பீடு வழங்க கடமைப்பட்டது அல்ல என்றாலும் சரியல்ல. இந்த வழக்கிற்காக தாக்கல் செய்யப்பட்ட மருத்துவ பில்களை கூடுதலாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. விபத்தில் என்னுடைய வாகனமும் சம்மந்தப்பட்டுள்ளதால், எனது வாகனத்தின் இன்சூரன்ஸ் நிறுவனத்தையும் இந்த மனுவில் தரப்பினராக சேர்க்காத காரணத்தினால் இந்த எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள இழப்பீடு அதிகம் என்றாலும், அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. அதனால் என்னுடைய மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை – இல்லை.</u>**

ஒம்/–PW1,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டூர்.